

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | பிப்ரவரி 23, 2017 | புரட்சி 16 | முழக்கம் 06 | விலை: ரூ.3.00

## ஈஷா மய்யத்தின் கிரிமினல் நடவடிக்கைக்குத் துணைப் போகாதீர்!

# மோடிக்குக் கருப்புக் கொடி

கோவை வனப்பகுதியில் யானைகள், மிருகங்கள் வாழும் பகுதிகளை முறைகேடாக ஆக்கிரமித்து கட்டிடங்களை எழுப்பி வரும் ஈஷா மய்யத்தின் நிறுவனர் ஜக்கி வாசுதேவ், புதிய கட்டுமானங்களைத் திறந்து வைக்க பிரதமர் மோடி பிப்.24 ஆம் தேதி வருகிறார். இதை எதிர்த்து கோவை வரும் மோடிக்கு பிப். 24ஆம் தேதி கருப்புக் கொடி காட்டும் போராட்டம் நடைபெறுகிறது.

திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள், சுற்றுச் சூழல் மனித உரிமை அமைப்புகள் இணைந்து இந்த கருப்புக் கொடிப் போராட்டத்தை நடத்துகின்றன. கழகத் தலைவர் கொளத்தூர் மணி போராட்டத்தில் பங்கேற்கிறார். தமிழகம் முழுதுமிருந்தும் கழகத் தோழர்களும் பல்வேறு முற்போக்கு சமுதாய இயக்கத்தைச் சார்ந்த தோழர்களும் கோவை நோக்கி திரளுகிறார்கள். சமூக வலைதளங்களில் இந்த செய்திகள் வேகமாகப் பரவி வருகின்றன. சட்ட விரோத, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஜக்கி வாசுதேவுக்கு ஆட்சி அதிகார மய்யங்கள் ஆதரவாக இருந்து வருகின்றன. அண்மையில் இவருக்கு மத்திய அரசு ‘பத்மவிஷன்’ விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது. உரிய அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக வனப் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டியுள்ள ஈஷா மய்யத்தின் கட்டிட வளாகத்தில் 112 அடி ‘ஆதியோகி சிவன்’ சிலையை பிரதமரே திறந்து வைக்க வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவருக்கு அரசு வழங்கிய பத்ம விபூஷன் விருதை திரும்பப் பெறக் கோரியும் இந்த கருப்புக் கொடிப் போராட்டம் நடைபெறுகிறது. ஜக்கி தனது இணையதளத்தில் மோடி வருகையை பதிவிட்டுள்ளார்.

ஜக்கி வாசுதேவ், யானைகளின் வழித்தடங்களை மறித்து, சட்ட விரோதமாக கட்டி வரும் கட்டிடங்களுக்கு எதிராக ஏற்கனவே உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விசாரணையில் இருந்து வரும் நிலையில் மோடி இந்தத் திறப்பு விழாவுக்கு வருவது நீதிமன்ற அவமதிப்பும் ஆகும்.

ஜக்கி வாசுதேவ், ஈஷா மய்யம் இருக்குமிடம் கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ‘இக்கரை பொல்லுவ பட்டி’ எனும் கிராமப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட வனப்பகுதி. 1994இல் ஈஷா மய்யம் இங்கே 2913.34 சதுர அடி கட்டிடங்களை மட்டுமே கட்டியிருந்தது. இப்போது 4 இலட்சத்து 27 ஆயிரத்து 700 சதுர அடிக்கு கட்டிடங்கள், பூங்காக்கள், விளையாட்டு இடங்கள், யோகா மண்டபங்கள், கார் நிறுத்தும் இடங்களை கட்டியிருக்கிறது.

## பிப். 24இல் கோவையில் தோழர்கள் திரளுகிறார்கள்

வனப்பகுதியில் கட்டிடங்களை கட்டுவதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ‘மலைத்தளப் பாது காப்புக் குழு’ (Hill Area Conservation Authority) என்ற அமைப்பின் ஒப்பதலைப் பெறவேண்டும். இந்தக் குழுவில் வனத்துறை அதிகாரிகள், பஞ்சாயத்து அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்தக் குழுவின் ஒப்புதல், பிறகு வனத்துறையின் ஒப்புதலோடு தான் கட்டிடங்கள் கட்ட வேண்டும். ஜக்கி வாசுதேவ், உள்ளூர் பஞ்சாயத்து ஒப்புதலை மட்டும் பெற்று மேற்குறிப்பிட்ட முக்கிய அமைப்புகளின் ஒப்புதல் பெறாமலே கட்டிடங்கள் கட்டியிருக்கிறார். இத்தகைய கட்டிடங்களால் யானையின் வழித்தடங்கள் தடுக்கப் பட்டு, அவைகள் மனிதர் வாழும் பகுதிக்குள் நுழைந்து விடுகின்றன. ஈஷா மய்யம் இங்கு வந்த

(4ஆம் பக்கம்)

## தமிழக அரசியல் குழப்பம்: கழகத்தின் நிலைப்பாடு

**தலையங்கம்**

ஜெயலலிதா மரணத்தைத் தொடர்ந்து தமிழ்நாட்டு அரசியலில் ஒவ்வொரு நாளும் திடீர் திடீர் மாற்றங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. அதிகாரத்தைக் கைப்பற்றுதலையே இலட்சியமாகக் கொண்டு செயல்படும் கட்சிகளில் அதன் ஒற்றை சர்வாதிகாரத் தலைமையில் வெற்றிடம் உருவாகிடும்போது கட்சி சிதறுண்டுதான் போகும். அணி சேர்க்கைகளுக்கு ஆதார சுருதியாக அதிகார மய்யங்களைக் கைப்பற்றுதலே இருக்குமே தவிர, கொள்கைப் பிரச்சினைகளுக்கு வாய்ப்பே இல்லை.

அ.இ.அ.தி.மு.க. கட்சியே தமிழக பா.ஜ.க. தான். தமிழ்நாட்டு அரசியல் நிகழ்வுகளுக்கு மத அடையாளம் தந்து, கட்சி நிகழ்வுகளையே மதச் சடங்குகளாக மாற்றிய கட்சி அது. பகுத்தறிவு சிந்தனைக்கோ, பகுத்தறிவாளர்களுக்கோ, அக்கட்சியில் துளியும் இடமில்லை. கட்சி அமைப்பும், ஜாதிய கட்டமைப்புக் குள்ளேயே முடங்கிக் கிடந்தது. இந்த நிலையில் பிளவுபட்டு நிற்கும் அணிகளில் எந்த அணி கொள்கைக்கானது என்ற ‘தேடல்களில்’ இறங்குவது, ‘இருட்டறைக்குள் கருப்புப் பூனையை’த் தேடும் கதையாகவே இருக்கும்.

பெரியார் வாழ்ந்த காலத்தின் அரசியல் களமும், பொது வாழ்க்கை நேர்மையும் முற்றிலும் வேறானது. தனது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உவப்பான அரசியல் கட்சியை தேர்வு செய்யவும், பார்ப்பனரல்லாத தமிழர் சமூக நலன் என்ற பார்வையில் ‘ஆதரவு–எதிர்ப்பு’களை வெளிப்படுத்தும் சமூக–அரசியல் சூழல் அப்போது இருந்தது. பெரியார் அப்படி எடுத்த ‘ஆதரவு–எதிர்ப்பு’ அணுகுமுறைகளைக்கூட தனது ‘இலட்சிய ஆளுமையின்’ கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆற்றலும் துணிவும் பெரியாருக்கு இருந்தது; வரலாற்றில் இதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு.

இப்போது தேர்தல் அரசியல் கட்சிகள் நிலை என்ன? மக்களிடமிருந்து அன்னியப்பட்டு வருகின்றன. வேறு வழியின்றி தேர்தலில் ஏதாவது ஒரு கட்சிக்கு ஆதரவு என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், பெரியார் இயக்கம் உள்ளிட்ட சமுதாய மாற்றத்துக்கான முற்போக்கு இயக்கங்களின் செயல்திட்டங்களும் போராட்டங்களும் பரப்புரைகளும் மக்கள் மன்றத்தை மய்யமாகக் கொண்டு சுழல வேண்டுமே தவிர, ஏதேனும் ஓர் அரசியல் கட்சியின் ஆதரவை நோக்கியே ஓடிக் கொண்டிருப்பது அல்ல; அவ்வப்போது எழும் பிரச்சினைகளில் மட்டும் கட்சிகளின் ஆதரவு, எதிர்ப்பு நிலைகளை எடுக்கலாம்.

தமிழக ‘இந்துத்துவா’ கட்சியான அ.இ.அ.தி.மு.க. அடுத்த 5 ஆண்டுகளுக்கு தமிழகத்துக்கு அதிகாரத்துக்கு வரக் கூடாது என்ற கண்ணோட்டத்தில்தான் கடந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிடர் விடுதலைக் கழகம் முடிவெடுத்து மக்கள் மன்றத்தில் வைத்தது. இப்போதும் கழகத்துக்கு அதே பார்வைதான். திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கைகளிலிருந்து விலகிச் சென்றாலும், திராவிட இயக்கத்தின் ‘மிச்ச சொச்ச’ அடையாளங்களோடு இருக்கும் கட்சி அதுதான் என்று தேர்தல் நிலைப்பாட்டில் நாம் எடுத்த முடிவு அப்படியே தொடருகிறது.

ஆனாலும், அண்மையில் சட்டமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு நடவடிக்கைகளில் தி.மு.க.வின் அணுகுமுறைகள் அக்கட்சிக்கு பெருமை சேர்ப்பதாக இல்லை என்பதே நமது கருத்து. சட்டமன்ற மாண்புகள் சீர்குலைக்கப்பட்டன. அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள சசிகலா பேச்சையும் சுட்டிக்காட்ட வேண்டும். “தி.மு.க.வுடன் நட்பு பாராட்டவே கூடாது; அவர்களைப் பார்த்து சிரிக்கக்கூட கூடாது; தி.மு.க. நமக்கு எதிர்க்கட்சி மட்டுமல்ல எதிரி கட்சி” என்று சசிகலா கூறும், அரசியல் அநாகரீகத்தின் உச்சம்.

தமிழ் நாட்டின் ‘அசாதரண’ அரசியல் சூழலை பார்ப்பனர்களும், பா.ஜ.க.வும், தங்கள் அதிகார மய்யங்களின் வழியாக தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள துடித்துக் கொண்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த முயற்சிகளை முறியடிப்பதற்கு நாம் மக்கள் மன்றத்துக்குத்தான் போக வேண்டும். ‘பார்ப்பனிய – மதவாத – ஜாதி எதிர்ப்பு’ முற்போக்கு இயக்கங்கள் அணி திரண்டு, பார்ப்பனிய மதவாத அரசியலை மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும். இளைய சமுதாயம் விழிப்படைந்து வருகிறது என்பதை ‘மெரினா’ போராட்டங்களே உணர்த்தி நிற்கின்றன.

மக்கள் கருத்துருவாக்கம் ஆட்சி அதிகாரங்களைப் பணிய வைக்கும் நிலையை நோக்கி நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.

அந்தத் திசையில் திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து பயணிக்கும்; பயணிப்போம்; கட்சி அரசியலைக் கடந்த இயக்கங்களின் ஓர்மையை உருவாக்குவோம்!

# சர்வாதிகாரியை தேர்வு செய்யும் ஜனநாயகம்

இந்தியாவின் ஜனநாயகம் தேர்தல் முறை குறித்து, பெரியார் கருத்துகளின் தொகுப்பு.

கட்சியின் பெயரால் அரசாங்கம் நடைபெறுகிறதென்றால் அது எப்படிச் சனநாயகம் ஆக முடியும்? அவரவர்கள் தங்கள் தங்கள் கட்சிக்கு வேண்டிய நோக்கங்களின்படி எதையும் செய்து கொள்ளுகிறார்கள் என்றால் அவர்கள் மக்களின் விருப்பத் திற்கிணங்க ஆட்சி புரிந்ததாகக் கொள்ள முடியுமா? தனிப்பட்ட கட்சியின் பேரால் வருபவரானாலும் அவர் பாரபட்சமின்றி யாவரையும் ஒன்றெனப் பாவித்து ஆட்சி புரிவதே முறையாகும். தன் கட்சிக்காக என்று நீதியையும் நேர்மையையும் கைவிடு வதென்பது முற்றிலும் ஒழுக்கமற்ற செயலாகும்.

– **'விடுதலை'** 12.1.1956

சனநாயகம் என்று சொல்லுவதன் மூலம் நாம் எந்தவிதப் பலனும் அடைய முடியாது. நமக்கு அதில் எந்தவித உரிமையும் இருக்க முடியாது. இந்திய ஆட்சியில் இருக்கும் வரை நாம் மைனாரிட்டி நாட்டவர். அதில் அடிமையாகத்தான் இருக்க முடியும். சனநாயக இந்திய ஆட்சி முறை என்ற அந்த முறையே பித்தலாட்டமான முறையாகும். நம்மை நிரந்தரமாய் அடிமைப்படுத்தி ஆள ஏற்படுத்தப் பட்ட சூழ்ச்சி முறையே.

– **'விடுதலை'** 20.1.1959

சரியாகவோ தப்பாகவோ இந்தியாவில் சனநாயக ஆட்சி வந்து விட்டது. ஆனால் கட்சி ஆட்சிகள் அதைச் சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கின்றன? இதைப் பார்த்து மற்ற நாட்டான் என்ன நினைப்பான்? சனநாயகவாதிகள் வெட்கப்பட வேண்டாமா?

– **'விடுதலை'** 19.3.1968

சதந்திரம் கொடுத்ததாகப் பெயரளவில் இருக்கிறது. ஆனால் அரசியலில் நடைபெறுவது எல்லாம் பித்தலாட்டமும் அயோக்கியத்தனமு மாகத்தான் இருக்கிறது. ஜெயித்தவன் அவனவன் சாதிக்கு நலத்தையும், சௌகரியத்தையும் செய்து கொள்கிறான் என்றால் இது சனநாயகமா? பித்தலாட்ட நாயகம், அயோக்கிய நாயகம், சாதி நாயகம் என்பதுதான் பொருந்தும்.

– **'விடுதலை'** 15.10.1954

சனநாயகம் என்பது ஒருவன் சர்வாதிகாரியாக ஆனான் என்பது தான். சனநாயகம் என்ற பித்தலாட் டத்தின் பெயரால் வருபவர் ஒரு சர்வாதிகாரிதான். இப்படிப்பட்ட சனநாயகத்தில் என்ன வாழுகிறது? இந்தச் சனநாயகத்தைக் குறை சொல்வதா என்று பயந்து கொண்டே எல்லோரும் இருந்து விட்டால் இக் கேடுகள் ஒழிய வேறு வழி என்ன இருக்கிறது?

– **'விடுதலை'** 25.8.1958

போதிய பிரதிநிதித்துவம் இல்லாத வர்களுக்குச் சரியான நீதியும் பிரதிநிதித்துவமும் வழங்குவதுதான் சனநாயகத் தத்துவத்திற்கு மதிப்புக் கொடுப்பதாகும். எல்லா வகுப்பு களுக்கும் ஏற்ற பிரதிநிதித்துவம் அளிக்காத எந்தச் சனநாயகமும் நொண்டிச் சனநாயகமாகத்தான் – உதவாக்கரைச் சனநாயகமாகத்தான் – காட்சியளிக்கும்.

– **'விடுதலை'** 6.3.1959

# கா.சு. நாகராசன் மீது, ஜாதி வெறி தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



**13-2-2017,** திங்கட்கிழமை மாலை 4-00 மணியளவில், கோவை வாட்டாட்சியர் அலுவலகம் முன்பாக, ஜாதி மதவாத ஆதிக்க எதிர்ப்புக் கூட்டமைப்பின் சார்பில், பொள்ளாச்சி கா.க.புதூரில் ஜாதி, மதவாத ஆதிக்க சக்திகளால், பெரியார் திராவிடர் கழகம், சுயமரியாதை சமதர்ம இயக்கத் தலைவர் கா.சு. நாகராசன் தாக்கப் பட்டதைக் கண்டித்தும், குற்றவாளிகளை பிற்பகல் 3 மணி வரை காவல் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த ஆனைமலை காவல்துறையினர் தப்ப விட்டதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார். ஆர்ப்பாட்டத்தில் ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் நாகராசன், எஸ்.டி.பி.ஐ. அபுகசிர், சமூகநீதிக் கட்சித் தலைவர் வழக்குரைஞர் பன்னீர் செல்வம், சமத்துவ முன்னணி வழக்குரைஞர் கார்க்கி, வழக்குரைஞர் முருகேசன், முருகர் சேனை சிவசாமித் தமிழன், தமிழ்க் கல்வி இயக்கம் சின்னப்பா தமிழர், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திராவிடர் கழக இளைஞர் அணி சிற்றரசு, புதுவை பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தலைவர் தீனா, கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச் சந்திரன், மாநகரத் தலைவர் நேரு, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு உள்ளிட்ட 250 பேர் கலந்து கொண்டனர்.

# நந்தினிக்கு நீதி கேட்டு நங்கவள்ளியில் ஆர்ப்பாட்டம்



நங்கவள்ளி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக அரியலூர் தலித் சிறுமி நந்தினி மீதான கூட்டு பாலியல் வன்கொடுமை கொலையை கண்டித்து நீதிக் கேட்டு கண்டன ஆர்ப்பாட்டம் நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் நடை பெற்றது. கண்டன ஆர்ப்பாட் டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன் தலைமை ஏற்க, நங்கவள்ளி அன்பு கண்டன உரையாற்றினார். அவரை தொடர்ந்து தலைமை செயற் குழு உறுப்பினர்களான சக்திவேல், விழுப்புரம் அய்யனார் மற்றும் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் வைரவேல் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இறுதியாக கழக மாநில பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் கண்டன உரையாற்றி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார். ஆர்ப்பாட்டத்திற்கு பல்வேறு பகுதிகளிலிருந்து தோழர்கள் வந்திருந்தனர். கண்ணன் நகர செயலாளர் நன்றியுரை கூறினார் .அறுபதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர் . பேருந்து நிலையத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் கவனிக்க ஆர்ப்பாட்டம் சிறப்பாக அமைந்தது.

# மேட்டூர் கோவிந்தராசு-கீதா இல்லத் திறப்பு



12.2.2017 அன்று சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராசு–கீதா இணையர் மேட்டூரில் கட்டியுள்ள புதிய இல்லத்தை கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந் திரன் திறந்துவைத்தார்.

நிகழ்வின் தொடக் கத்தில் இல்லத்தின் உரிமையாளர் கோவிந்தராசு, அவரது மகள் அருள்மொழி உள்ளிட்டோரின் பறையிசையோடு நிகழ்வு தொடங்கியது. அடுத்து கொள்கைப் பாடல்கள் மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவினரால் பாடப் பட்டன.

இல்ல உரிமையாளர் கீதாவின் அக்கா கணவரும், பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, வெளியீட்டு செயலாளர் கோபி இளங்கோவன், அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

கழக வளர்ச்சிக்கு ரூ.2000/– நிதி பொதுச் செயலாளரிடம் வழங்கப்பட்டது.

# ஹிட்லர் - முசோலினியை ஆதரித்த-ஆர்.எஸ்.எஸ்.

*தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் "யார் தேச விரோதிகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் 5.2.2017 அன்று மாலை நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் நடந்த காலத்தில் இரண்டாவது உலக யுத்தமும் நடந்து கொண்டிருந்தது. அந்த காலகட்டங்களில் யூதர்களை இனப்படுகொலை செய்து, உலக வரலாற்றில் இன்று வரை வெறுக்கப்படும் இனப் படுகொலையாளர் ஹிட்லரை ஆதரித்ததுதான் ஆர்.எஸ்.எஸ். ஹிட்லரின் ஸ்வஸ்திக் கொடியை தங்கள் கொடியாக வைத் திருந்தார்கள்; முதல் உலகப் போர் நடந்தபோது இந்தியாவில் ஆயுதம் தாங்கிய உள்நாட்டுப் புரட்சியை நடத்தி இந்தியாவை 'இந்து இராஜ்யமாக்க'த் திட்ட மிட்டார்கள். அப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த ஹெட்கேவர் என்ற 'சித்பவன்' பார்ப்பனர், தங்களது குருவான திலகரிடம் இந்த யோசனையை முன் வைத்தபோது, திலகர் அது நடைமுறையில் தோல்வியைத் தழுவி விடும் எனக் கூறிவிட்டார்.

ஹிட்லரின் இனப்படுகொலையை பகிரங்கமாகவே ஆதரித்தது ஆர்.எஸ்.எஸ். என்பதை இளைய சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல்வாக்கர் என்ற பார்ப்பனர் பற்றியும், அவர்தான் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கொள்கையை உருவாக்கித் தந்தவர் என்பதையும் ஏற்கனவே நான் கூறினேன். இதோ ஹிட்லரை அவர் ஆதரித்து எழுதியதை உங்களிடம் படித்துக் காட்டுகிறேன். இது "நாம் அல்லது நமது தேசத்தின் வரையறை" என்ற கோல்வாக்கர் எழுதிய நூல். 1939ஆம் ஆண்டு வெளிவந்த இந்த நூல், ஆர்.எஸ்.எஸ். கும்பலின் உண்மை முகத்தை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியதால், இந்த நூலை வெளியிடுவதையே நிறுத்தி விட்டார்கள். அதற்குப் பிறகு இந்த நூல், எங்கள் தலைவர் கோல்வாக்கர் எழுதிய நூலே இல்லை என்று முழுப் பொய்யை அவிழ்த்து விட்டார்கள்.

ஏதோ மராத்திய மொழியில் ஜி.டி. சாவர்க்கர் என்பவர் எழுதிய நூலை கோல்வாக்கர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தந்தாரே தவிர, அவரே எழுதிய நூல் அல்ல என்று முழுப் பூசணிக்காயை சேற்றில் மறைக்க முயன்றார்கள், இந்த 'அரிச்சந்திரனின் பேரர்கள்'. ஆனால் அதே நூலின் முன்னுரையில் கோல்வாக்கர், இந்த நூலை எழுதியது 'நான்தான்' என்றும், ஜி.டி. சாவர்க்கர் எழுதிய நூல் இந்த நூலை எழுத எனக்கு உத்வேகம் தந்தது என்றும் தெளிவாக விளக்குகிறார். ஏன், இந்த நூலைக் கண்டு 'அவாள்களே' மிரள வேண்டும்? இதை எழுதியது எங்கள் தலைவரே அல்ல என்று பொய்யாக மறுக்க வேண்டும்? அந்த நூலிலிருந்து தான் இப்போது ஹிட்லரை ஆதரித்து எழுதியதை உங்களிடம் படித்துக் காட்டுகிறேன்.

> *"ஜெர்மன் இனப் பெருமை இன்று உலகம் முழுதும் பேசப்படுகிறது. அது தனது இனத்தையும் தூய்மையான கலாச் சாரத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே 'செமிட்டிக்' இனத்தவரான யூதர்களை வெளியேற்றி, உலகத்தையே அதிர்ச்சிக் குள்ளாக்கியது. இதுதான் ஒரு இனத்தின் பெருமையை வெளிப்படுத்தும் மிக உயர்ந்தபட்ச நடவடிக்கை. ஆழமான வேறுபாடுகளைக் கொண்ட வெவ்வேறு இனங்களையும், கலாச்சாரங்களையும் ஒன்றுபடுத்தவே முடியாது என்பதை ஜெர்மன் நிரூபித்திருக்கிறது. இந்துஸ் தானத்தில் வாழும் நமக்கு இது ஒரு படிப்பினை."*

இப்படி ஹிட்லரையும் அவனது கொடூரமான இனப்படுகொலையையும் ஆதரித்தவர்கள்தான் இன்று 'மெரினா கடற்கரையிலும்' தேச விரோதிகள் ஊடுருவிவிட்டார்கள் என்று பேசும் 'தேச பக்த'க் கொழுந்துகள்.

இது தொடர்பாக மற்றொரு வரலாற்றுத் தகவலை யும் சுட்டிக் காட்ட முடியும்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நாக்பூரில் உருவாக்கிய அய்ந்து பார்ப்பனர்களில் ஒருவரான பி.எஸ். மூஞ்சே, 1930இல் இலண்டன் வட்ட மேஜை மாநாட்டுக்குச் சென்றபோது, அங்கிருந்து இத்தாலிக்குச் சென்று பாசிசத் தலைவர் முசோலினியை சந்தித்துப் பேசியதை கிறிஸ்டோப் ஜாபர்லெட் என்பவர் தனது ஆய்வு நூலில் (இந்து தேசிய இயக்கமும், இந்திய அரசியலும்) சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து மார்சியா காசலோரி எனும் இத்தாலிய ஆய்வாளர், இது தொடர்பாக இத்தாலி மற்றும் மும்பை ஆவணக் காப்பகங்களில் உள்ள ஆய்வேடுகளைப் படித்து 'எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' இதழில் (ஜன. 22, 2000) ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்ற பி.எஸ். மூஞ்சே, 1931இல் இத்தாலிக்குச் சென்று முசோலினியைச் சந்தித்தார். முசோலினி இயக்கம் நடத்திய பல்வேறு அமைப்புகள், நிறுவனங்களை நேரில் பார்த்து 13 பக்கங்களுக்குக் குறிப்புகள் எழுதியிருக்கிறார் மூஞ்சே. 1931 மார்ச் 19ஆம் தேதி மாலை 3 மணி யளவில் வெனிஷீய அரண்மனையில் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியை சந்தித்து, அவர் நடத்தி வந்த பாசிச அமைப்புகளை வெகுவாகப் பாராட்டினார்.

> *"வளரும் நாடுகளுக்கு இதுபோன்ற இராணுவ அமைப்புகள் மிகவும் தேவை. குறிப்பாக இந்தியாவுக்குப் புத்துயிர் ஊட்ட இதுபோன்ற இராணுவ அமைப்புகள் அவசியம் தேவை. இதே நோக்கில் நானாகவே சிந்தித்து, எங்கள் நாட்டில் ஏற்கனவே ஒரு அமைப்பை நான் உருவாக்கியுள்ளேன். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் நாட்டு இராணுவ அமைப்புகள் பற்றிப் புகழ்ந்து பேசுவேன்"*

- என்று கூறி விடை பெறுகிறார் மூஞ்சே.

இளைஞர்களிடம் பாசிசக் கருத்துக்களைத் திணிப்பதுதான் இந்நிறுவனங்களின் நோக்கமாகும். இதை முன்மாதிரியாகக் கொண்டே ஆர்.எஸ்.எஸ். பயிற்சி அமைப்புகளை இந்தியாவில் உருவாக்கினர்.

மூஞ்சே இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு ஹெட்கேவருடன் இணைந்து பாசிசம் பற்றித் தீவிரமாக விவாதித்தார். 1934இல் பாசிசமும்-முசோலினியும் என்ற தலைப்பில் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தனர். இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தவர் காக்தே சாஸ்திரி. 'தி மராத்தா' என்ற பத்திரிகைக்கு மூஞ்சே ஒரு பேட்டியளித்தார்.

> *"இந்தியாவில் இராணுவ ரீதியான இளைஞர் இயக்கம் அமைக்கப்பட வேண் டும். ஜெர்மனி இளைஞர் இயக்கத்தைப் போலவும், இத்தாலியில் உள்ள பலில்லா இயக்கத்தைப் போலவும் (இராணுவப் பயிற்சியுடன் பாசிச சிந்தனைகளையும் பயிற்றுவிக்கும் இயக்கம்) அந்த இயக்கம் அமைய வேண்டும். இந்த இயக்கங்களை நானே நேரில் சென்று பார்வையிட்டேன். என்னுள் மிகப் பெரும் தாக்கத்தை இந்த இயக்கங்கள் உருவாக்கிவிட்டன"*

- என்று அந்தப் பேட்டியில் மூஞ்சே கூறினார்.

> *"இந்து தர்ம சாஸ்திரங்களின் அடிப் படையில் இந்துமிசக் கோட்பாட்டை உருவாக்கி இந்தியா முழுவதும பரப்பு வதற்கான திட்டம் ஒன்றை ஆலோசித்து வருகிறேன். ஆனால் சிவாஜி, முசோலினி அல்லது ஹிட்லரைப் போன்ற ஒரு இந்து சர்வாதிகாரியின் கீழ் நமக்கு சுயராஜ்யம் கிடைத்தால்தான், இந்தத் திட்டத்தை அமுல்படுத்த முடியும். அதற்காக, சர்வாதி காரிகள் உருவாகிறவரை, நாம் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. நாம் விஞ்ஞான ரீதியாக ஒரு திட்டத்தை உருவாக்கிப் பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும்"*

- என்று ஹெட்கேவர், கோகலே ஆகியோரை சந்தித்துப் பேசும்போது மூஞ்சே கூறுகிறார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் உளவுத் துறை அறிக்கை களும், மூஞ்சேயின் இந்தத் திட்டங்களை உறுதி செய்கின்றன.

> *"எதிர்கால இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு - இத்தாலி 'பாசிச'மாகவும், ஜெர்மனி நாசிசமாகவும் தன்னை உறுதிப் படுத்திக் கொள்ளும். இது மிகைப்படுத்தப் பட்டதாகக் கருத வேண்டாம்"*

- என்று பிரிட்டிஷ் உளவுத் துறை அறிக்கையும் இந்த ஆபத்தைப் பதிவு செய்திருக்கிறது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதி, அதாவது இந்தியாவுக்கு 'சுதந்திரம்' வந்த அந்த நாளில் இவர்கள் என்ன செய்தார்கள் ?

நாடெங்கும் மூவர்ண தேசியக் கொடி ஏற்றப்பட்ட அந்த நாளில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நடத்திய நாடகம் என்ன ? நாட்டுப் பற்றுக்கும் தேச பக்திக்கும் தாங்களே பிறப்பெடுத்தவர்கள் என்று மார் தட்டிக் கொள்வதால் இதை நாம் சுட்டிக்காட்டிக் கேட்கிறோம்.

இதோ பரபரப்பான 'Freedom at Midnight' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டுகிறோம்.

> *"1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதி, பூனா நகரத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அங்கும் கொடிதான் ஏற்றப்பட்டது. ஆனால் அது சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடி அல்ல; அது காவிக் கொடி; 500 ஆண்கள் அந்த இடத்திலே திரண்டிருந்தனர். அய்ரோப்பாவையே நடுங்க வைத்த ஹிட்லரின் 'ஸ்வஸ்திக்' கொடியைத்தான் அங்கே ஏற்றினார்கள்.*
>
> *ஹிட்லர் கொடியிலிருந்து மிகச் சிறிய மாற்றம் மட்டுமே அதில் செய்யப்பட் டிருந்தது. அந்தக் கொடியில் பொறிக்கப் பட்டிருந்தது ஆரியச் சின்னம். அங்கே கூடியிருந்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். என்ற வகுப்புவாத பாசிச அமைப்பைச் சார்ந்தவர்கள்"*

- என்று அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த 'சுதந்திரத்தை' நாமும்கூட ஏற்கவில்லை; வந்த சுதந்திரம் பார்ப்பன-பனியாவுக்கே என்று கூறுகிறோம். அதற்காக நம்மை தேச விரோதிகள் என்று கூறுகிறார்கள்; ஆனால், அவர்களின் சுதந்திர எதிர்ப்பு மட்டும் 'தேச பக்தி'யாகி விடுமா ? பதில் கூற வேண்டும்.

அது மட்டுமல்ல; மற்றொரு அதிர்ச்சியூட்டும் தகவலும் அதே நூலில் அடுத்த வரியிலேயே தரப்பட்டிருக்கிறது.

> *"அந்த இடத்திலே கூடியிருந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்களில் சிலருக்கு ஒரு உத்தரவு பணிக்கப்பட்டிருந்தது! அதற்கு சரியாக 48 மணி நேரத்துக்கு முன், கராச்சியில் மவுண்ட்பேட்டன் அவர் களோடு ஜின்னாவையும் சேர்த்து சுட்டுக் கொல்ல வேண்டும் என்று உத்தரவு பெற் றிருந்தவர்களும் அங்கே குழுமியிருந்தனர். அந்த முரட்டுத்தனமான வெறியர்கள் கூட்டம் தங்களை ஆரியர்களின் வாரிசு களாக எண்ணிக் கொண்டிருந்தது"*

- என்ற தகவலும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கு 'சுதந்திரம்' வழங்குவது பற்றி பேச்சு வார்த்தை நடத்த வந்த மவுண்ட்பேட்டனையும் பாகிஸ்தான் தனிநாடு கேட்ட ஜின்னாவையும் தீர்த்துக் கட்ட சதித் திட்டம் போட்டு தோல்வி அடைந்த கலவரக் கும்பல்தான் இந்த ஆர்.எஸ்.எஸ்.!

மேலும் அந்த நூலில் தொடர்ந்து தரப்பட்டிருக்கிற தகவலைப் பாருங்கள்.

> *"அந்தக் கூட்டம் காந்தியை வெறுத்தது; காந்தியின் அஹிம்சை முறையைக் கோழைத்தனம் என்று அந்தக் கூட்டத்தினர் கூறினர். முஸ்லீம் மைனாரிட்டிகளோடு சகோதரத் தன்மையோடு பழக வேண்டும் என்று காந்தி சொன்னதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்களின் வாரிசுகளாக அந்தக் கூட்டம் தங்களைக் கருதிக் கொண்டது. முஸ்லீம்கள் தனிநாடு பெற்றதற்கு ஒரே காரணம் காந்திதான்*

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சென்னையில் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாராட்டு விழா

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகம் சார்பில் காதலர் தினத்தை யொட்டி ஜாதிமறுப்பு திருமணம் செய்த காதல் இணையர்களுக்கு பாராட்டு விழா 14.02.2017 அன்று மாலை 6 மணியளவில் கழக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாவட்டச்செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார். செந்தில் FDL முன்னிலை வகித்தார். 10 ஜாதி மறுப்பு இணையர்களைப் பாராட்டி நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அரங்க. குணசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்ட தலைவர் வேழவேந்தன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

ரவிபாரதி, தாஜ் நிஷா ஆகியோர் கவிதை வாசித்தனர். அருள்தாஸ் பாடல்களை பாடினார். இந்நிகழ்வில் 70க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு உணவு அளிக்கப்பட்டது. பாராட்டு விழா 9 மணியளவில் நிறைவடைந்தது.



**பாராட்டுப் பெற்ற ஜாதிமறுப்பு திருமணம் செய்த காதல் இணையர்**

ஜெயமாலா-மனோகர்; கௌதமி-சதிஷ்; தரணி-குமரேசன்; ஜெமீன்-ரவி; கோமதி-திவாகர்; கோகிலா-கண்ணதாசன்; புவனேஷ்வரி-பார்த்திபன்; ரேஷ்மா-சார்லஸ்; கார்த்திகா-செல்வன்; சங்கரி-பாலு; லாவண்யா-சுரேஷ்.

# அய்யா இனியன் பத்மநாபன் 90ஆம் அகவை விழா



திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஈரோடு மாவட்ட ஆலோசகர், பெரியார் விருதாளர் அய்யா இனியன் பத்மநாபன் 90 ஆவது பிறந்தநாள் விழா 15.02.2017 புதன்கிழமை அன்று மாலை 6 மணியளவில் ஈரோடு ஹோட்டல் ரீஜென்சியில் நடைபெற்றது. விழாவில் ஆசிரியர் சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

தோழர்கள் நாத்திகஜோதி, சண்முகப்பிரியன், செல்லப்பன், வேணுகோபால், கவிஞர் சின்னப்பன், பாரதிதாசன் கல்லூரிப் பேராசிரியர் சதீஸ்குமார், ஆசிரியர் சிவகாமி, கிருஷ்ணமூர்த்தி, வசந்தி, கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக அய்யா இனியன் பத்மநாபன் ஏற்புரையில் தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். இவ்விழாவில் அய்யாவின் குடும்பத்தார்களும், ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்ட தோழர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பிறந்தநாள் விழா மகிழ்வாக அய்யா இனியன் பத்மநாபன், கழக வளர்ச்சிக்கு ரூ.1000 வழங்கினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிறகு யானைகள் மரணமும், யானைகளால் தாக்கப்பட்ட மனிதர்கள் மரணமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது குறித்து உச்சநீதிமன்றத்திலும் வழக்கு வந்தது. (டி.என். கோதாவர்மன் திருமுல் பார்க் எதிர் இந்திய அரசு - 2012 3S.C.C.277) அப்போது உச்சநீதிமன்றம் மிருகங்களின் வாழ்விடங்களை அபகரித்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. 2012ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் தேதி வனத்துறை ஆளுநர், ஈஷா மய்ய கட்டிடங்களால் யானையின் வழித் தடங்கள் பாதிப்புக்குள்ளாவதையும் அதே ஆண்டில் மாவட்ட வனத்துறை அதிகாரி திருநாவுக்கரசு இந்த கட்டிடங்கள் கட்டுவதை அனுமதிக்கக் கூடாது என்றும் அதிகாரபூர்வமாக எதிர்ப்பு தெரிவித்தும் ஆட்சியாளர்களோ ஜக்கியோ கண்டு கொள்ளவில்லை.

தமிழ்நாட்டில் 14 மணி நேரம் மின்வெட்டு அமுலில் இருந்தபோது , 2012ஆம் ஆண்டில் ஈஷா மய்யத்துக்கு மட்டும் அன்றைய தமிழக ஆட்சி 24 மணி நேரமும் தடையில்லாத மின்சாரத்தை வழங்குவதற்கு தனி ஏற்பாடுகளை செய்து தந்திருந்தது. இதை எதிர்த்து 2012 அக்டோபர் முதல் தேதி பாபநாசத்தில் உள்ள மின் வாரிய அலுவலகம் முன் திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

ஈஷா மய்யம் குழந்தைகளின் சித்திரவதைக் கூடாரமாக மாறி நிற்பதை எதிர்த்து உயர்நீதிமன்றங்களில் வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. ஈஷா மய்யத்தில் ‘நல்லொழுக்கம், சமஸ்கிருதப் பயிற்சிக்காக’ தனது இரண்டு மகன்களை சேர்ந் திருந்தார், மதுரை திருப்பாளையத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உளவுத் துறைக் காவலர். அவரது பெயர் மகேந்திரன். ஒரு மகனுக்கு ரூ.5 இலட்சம், மற்றொரு மகனுக்கு ரூ. 7 இலட்சம் கட்டணமாக செலுத்தினார். இரண்டு பேரும் மனநல பாதிப்புக்கு உள்ளாகி விட்டனர். தனது மகனைப் போலவே பல சிறுவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகி வருகின்றனர் என்றும் அவர்களை மீட்க வேண்டும் என்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் அவர் வழக்கு தொடர்ந் துள்ளார்.

கோவை வடவள்ளிப் பகுதியைச் சார்ந்த காமராஜ் என்பவர், தன்னுடைய இரண்டு மகள்களுக்கு கட்டாயப்படுத்தி மொட்டையடிக்கப்பட்டு சன்யாசி யாக்கப்பட்டுள்ளனர், அவர்களை மீட்டுத் தர வேண்டும் என்று கோவை மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் புகார் செய்தார்.

**குற்றப் பின்னணி**

2011ஆம் ஆண்டு சேலம் அரசு கலைக் கல்லூரிக்கு ஜக்கி வாசுதேவ் உரையாற்ற வருகிறார் என்பதை அறிந்து கழக சார்பில் எதிர்ப்பு துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. அப்போது பெரியார் திராவிடர் கழகமாக, கழகம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதில் இடம் பெற்றிருந்த தகவல்கள்:

- “40 ஆண்டுகளுக்கு முன் கோவைப் ப்ரூபாண்ட் ரோடு மேம்பாலம் கீழ்ப்புறத்தில் குதிரை வண்டிகள் நிறுத்துமிடத்தில் சமூக விரோதிகளுக்கு கஞ்சா விற்பனை செய்தவர் ஜக்கி வாசுதேவ். இவருக்கு ‘ரிச்சர்டு’ என்ற ரவுடி மிகவும் உதவியாக இருந்தார். இருவருக்கும் ஒரு பெண்ணுடன் தொடர்பு இருந்தது. ரிச்சர்டுக்கும் ஜக்கிக்கும் நடந்த வியாபார மோதலில் பெண்ணின் கதி தெரியவில்லை. ரிச்சர்டு கொலை செய்யப்பட்டார். அதேபோல ஜக்கி தனது சொந்த மனைவியையும் கொலை செய்து விட்டார் என்ற வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளபோது பல ஆண்டுகளுக்கு முன்பே மத்திய புலனாய்வுத் துறையின் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது” என்று அந்தத் துண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர்கள் சொன்னார்கள். அந்தக் கூட்டத்திலே முதல் வரிசையிலே நின்று கொண்டிருந்தார் நாதுராம் கோட்சே.”

(‘Freedom at Midnight’ என்ற நூலில் பக்கம் 273, 275-இல் கூறப்பட்டிருக்கிற தகவல்தான் மேலே தரப்பட்டிருக்கிறது. )

ஆம்! காந்தியாரை சுட்டுக் கொன்ற அதே நாதுராம் கோட்சே தான் அன்றைய தினம் (1947 ஆகஸ்ட் 15இல்) ஆர்.எஸ்.எஸ்.காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆரியக் கொடியை ஏற்றியவர்!

அந்தக் கோட்சே ஒரு பத்திரிகையின் ஆசிரியர். அந்த பத்திரிகையின் பெயர் ‘Hindu Rashtra’ என்பதாகும்.

‘சுதந்திர’ நாளில் அந்தப் பத்திரிகையின் தலையங்கப் பகுதி, கறுப்பு மய்யினால் நிரப்பப்பட்டு வெளியே வந்தது.

ஆரியக் கொடி ஏற்றியபோது, முன் வரிசையிலே நின்று கொண்டிருந்த நாதுராம் கோட்சே உணர்ச்சி வசப்பட்டு அலறுகிறான்!

“இந்துக்கள் கொலை செய்யப்படுகிறார்கள்; இந்துப் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்; இதை மறைப்பதற்கே சுதந்திரம் பேசுகிறார்கள். இத்தனைக்கும் காரணம் காங்கிரஸ்தான்; எல்லாவற்றிற்கும் மேலாக காந்தி தான்”

என்று கோட்சே அப்போது அலறுகிறான். (ஆதாரம்: மேற்குறிப்பிட்ட அதே நூல்)

உடனே நாதுராம் கோட்சே, 500 தொண்டர்களோடு சேர்ந்து ஆரியக் கொடிக்கு ‘சல்யூட்’ செய்கிறான், குனிந்து தரையை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு, “என்னை வளர்த்த தாய் நாடே; உனக்காக எங்கள் உடல் சாகத் தயார்”

என்று பிரகடனப்படுத்துகிறான்.

அதற்குப் பிறகு 5 மாதங்களில் 1948, ஜனவரி 30இல் அதே நாதுராம் கோட்சே என்ற பார்ப்பனரால் காந்தியார் சுட்டுக் கொல்லப்படுகிறார்.

(தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd Feburary 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN